FWC

# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# தவணைப் பரீட்சை, யூலை - 2019
# Conducted by Field Work Centre, Thondaimanaru
# In Collaboration with Provincial Department of Education
# Northern Province
# Term Examination, July - 2019

**பொதுச்சாதாரணப் பரீட்சை** ,uz;L kzpj;jpahyk;

**கவனிக்க :**

❖ 1 - 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையப் புள்ளடி (✕) இடுக.

---

01) 2018 ஆம் ஆண்டின் மத்திய வங்கியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படைச் சமூக சுட்டியில் இலங்கையரின் வாழ்க்கைப் பண்புத் தரம் (Quality of Life) தொடர்பான தவறான சமூககாட்டி இவற்றுள் எது?
   1. எழுத்தறிவு வீதம் 92.6%.
   2. பிறப்பில் ஆயுள் எதிர்ப்பு 75.5 வருடங்கள்.
   3. நாளொன்றுக்கு உள்ளெடுக்கப்படும் கலோரி அளவு 2095.
   4. குடித்தொகை அடர்த்தி 342
   5. சராசரி மாத வருமானம் 34184 ரூபா.

02) அமெரிக்க உளவுத்துறையின் சுருக்கப் பெயர் யாது?
   1. ISI 2. RAW 3. KAB 4. FBI 5. MI - 16

agaram.lk

03) இலங்கை வெளிநாட்டு பணியக தொலைபேசி இலக்கம் எது?
   1. 1929 2. 1938 3. 1954 4. 1977 5. 1989

04) இந்திய நாடாளுமன்ற தேர்தலில் மீண்டும் நரேந்திர மோடி இந்தியாவில் பிரதமராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். பின்வரும் கூற்றுக்களை கருதுக.
   A. பாரதிய ஜனதாகட்சி 350 ஆசனங்களை பெற்றது.
   B. இந்தியா பூராகவும் 542 தொகுதிகளுக்கு போட்டி நடைபெற்றது.
   C. 48 ஆண்டுகளுக்கு பின்னர் தனிப் பெரும்பான்மையுடன் தொடர்ந்து இரண்டு முறை ஆட்சியமைக்கும் பெருமைக்குரியவராக நரேந்திர மோடி உள்ளார்.

   இவற்றுள் சரியானது.
   1. A மட்டும் 2. B மட்டும் 3. C மட்டும் 4. A யும் B யும் 5. மூன்றும்

05) சார்கோஸ் தீவுகளை கைவிட பிரிட்டனை வலியுறுத்தும் ஐ.நா தீர்மானத்தை பிரிட்டன் ஏற்கவேண்டும் என 116 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. இத்தீவினை எந்நாட்டிடம் கையளித்தல் வேண்டும் என கேட்கப்பட்டது.
   1. மொரிசியஸ் 2. பிரான்ஸ் 3. மோல்டோ 4. அயர்லாந்து 5. ஹங்கேரி

06) இலங்கையின் கல்விமான்களில் ஒருவரின் 75 வது இறந்த ஆண்டு நிகழ்வு (75th Death Anniversary) May 28ம் திகதி நடைபெற்றது. இக்கல்விமான் யார்?
   1. C.W.W கன்னங்கரா (C.W.W. Kannankara)
   2. D. B ஜெயதிலக்க (D.B. Jeyathilaka)
   3. பதுயுதீன் முகமட் (Badiuddin Muhmad)
   4. E. A நுகவெல (E.A Nugawela)
   5. M.D பண்டா (M.D Banda)

07) 2019ம் ஆண்டு உலக கிண்ண கிரிக்கெட் போட்டி தொடர்பான பின்வரும் தரவுகளின் பிழையானது எது?
1. இது 12 வது உலக கிண்ண போட்டியாகும்.
2. 10 நாட்டு அணிகள் பங்கு பற்றுகின்றன.
3. 5வது தடவையாக இங்கிலாந்து இப்போட்டியை நடாத்துகின்றது.
4. இப்போட்டியில் சம்பியன் ஆகும் அணிக்கு 6 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கும்.
5. முதலாவது போட்டி மே – 30ம் திகதி ஓவல் (Oval) மைதானத்தில் நடந்தது.

08) 2019 யூன் 5ம் திகதி சுற்றாடல் தினம் கொண்டாடப்பட்டது. ஐ. நா சபையின் அறிவிக்கப்பட்ட இத்தினத் தொனிப்பொருள் (theme) என்ன.
1. Beat Air Pollution  2. Beat Plastic Pollution  3. Connecting People to nature
4. Go wild for life  5. Only one earth

09) 2019 பிரிட்டனில் நடைபெற்ற நுண்மதி (IQ) போட்டியில் இலங்கை சிறுமி "Nishi Uggalle" ஐஸ்டைனின் நுண்மதி புள்ளியிலும் அதிக புள்ளி பெற்றார். என கூறப்பட்டதுடன் போட்டியில் வெற்றி பெற்றார். இவரின் நுண்மதி புள்ளி எத்தனை?
1. 120  2. 140  3. 150  4. 160  5. 162

10) இலங்கையின் 71வது சுதந்திர தினக்கொண்டாட்டத்தில் எந்நாட்டில் ஜனாதிபதி சிறப்பு பிரதி நிதியாக கலந்து கொண்டார்.
1. நேபாளம்  2. மாலைதீவு  3. பூட்டான்  4. பாகிஸ்தான்  5. ஆப்கானிஸ்தான்

11) 60 மாணவர்களைக் கொண்ட வகுப்பறையில் மகேஸ் என்பவர் முன்னிருந்து 26 வது ஆக உள்ளார். இவர் பின்னிருந்து நிற்கும் நிலை என்ன?
1. 33  2. 34  3. 35  4. 36  5. மேற்கூறிய ஒன்றுமல்ல


12) எனது சகோதரன் என்னைவிட 422 நாட்கள் மூத்தவனாகவும் என்னுடைய சகோதரி 50 வாரங்கள் அவனை விட மூத்தவள் ஆவாள். எனது சகோதரி ஞாயிற்றுக்கிழமை பிறந்தால் நான் எந்த நாளில் பிறந்து இருப்பேன்.
1. திங்கள்  2. செவ்வாய்  3. புதன்  4. வியாழன்  5. வெள்ளி


agaram.lk


13) 50 வினாக்கள் கொண்ட வினாத்தாளுக்கு விடையளிக்கும் ஒருவருக்கு சரியாக விடையளிக்கும் வினா ஒன்றுக்கு 2புள்ளி வீதமும் கூட்டப்படும் பிழையாக விடையளிக்குக. வினா ஒன்றுக்கு 1 புள்ளி வீதம் கழிக்கப்படும். 50 வினாக்களுக்கு விடையளித்த ஒரு மாணவன் 67 புள்ளி பெறும் போது அவன் சரியாக விடையளித்த வினாக்களின் எண்ணிக்கை எத்தனை?
1. 11  2. 15  3. 39  4. 40  5. 50


14) கரன் என்பவன் தெற்கைநோக்கி நடக்க ஆரம்பித்து 15 m நடந்தபின் வடக்கை நோக்கித் திரும்பி 20 m நடந்தபின் அவன் கிழக்கு நோக்கி திரும்பி 10 m நடக்கிறான். அவன் தொடச்சியாக தெற்கை நோக்கி திரும்பி 5m நடக்கிறான். தற்போது அவன் நிற்பது ஆரம்ப இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் எத்திசையில்?
1. 10 m கிழக்கு  2. 10 m தென்கிழக்கு  3. 10 m, மேற்கு
4. 10 m, வடகிழக்கு  5. மேற்கூறிய ஒன்றுமல்ல.


15) உருக்கு, மரம், கட்டடப்பொருட்கள் எனும் நிகழ்ச்சியை குறிக்கும் தொடை பின்வருவனவற்றில் எது?

1. 

2. 

3. 

4. 

5. 

❖ ***16, 17 ஆம் வினாக்கள் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டது. அட்டவணையில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் குறித்த ஒரு எண்பெறுமானத்தைக் கொண்டது. ஒவ்வொரு எழுத்துக்களின் கூட்டுத்தொகை கிடையாகவும் நிலைக்குத்தாகவும் தரப்பட்டுள்ளன.***

| | | | | |
|---|---|---|---|---|
| A | B | C | D | 14 |
| D | D | A | C | 17 |
| B | C | B | A | 11 |
| 10 | 11 | 09 | 12 | |

16) எழுத்து A இற்கு வழங்கப்படும் எண் எது?
1. 2  2. 3  3. 4  4. 5  5. 6

17) எழுத்து D இற்கு வழங்கப்படும் எண் எது?
1. 2  2. 3  3. 4  4. 5  5. 6


❖ ***18, 19 வினாக்கள் பின்வரும் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டது.***

A + B என்பது  A ஆனவர் B இலும் உயரமானவர்.
A ● B என்பது  A ஆனவர் B இலும் கட்டையானவர்.
A - B என்பது  A,B ஆகியவற்றின் உயரம் சமன்.

18) P + Q – R● S என்ற கூற்றால் விளங்குவது,
1. P அல்லது S அதி உயரமானவர்
2. Q அல்லது S அதி உயரமானவர்
3. R அல்லது S அதி கட்டையானவர்
4. R இலும் பார்க்க Q அதி கட்டையானவர்
5. R இலும் பார்க்க S அதி கட்டையானவர்

19) P ● Q + R + S – T என்ற கூற்றால் விளங்குவது,
1. P அதி உயரமானவர்
2. Q அதி உயரமானவர்
3. Q, T உயரங்கள் சமனாகும்
4. R, S உயரங்கள் சமனாகும்
5. T அதி கட்டையானவர்.

20) ABCD ஆனது ஒவ்வொரு பக்கமும் 10 m நீளமான ஒரு சதுரமாகும். AE = 2 m, HD = 3 m செவ்வகம் EFGH இன் பரப்பு ABCD யின் பரப்பளவின் $\frac{1}{5}$ எனின் EF இன் நீளம் எவ்வளவு?
1. 3 m  2. 3.5 m  3. 4 m  4. 4.5 m  5. 5 m




agaram.lk

❖ ***21 தொடக்கம் 23 வரையுள்ள வினாக்கள் தர்க்க ரீதியான முடிவுகளுக்கு வருதல் தொடர்பானதாகும். இங்கு ஒவ்வொரு வினாவிலும் முதலில் இரு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. அதற்கேற்ப பெறக்கூடியதென காட்டப்படும் இரு முடிவுகளும் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கும் போது ஏற்றுக் கொள்ள முடியாதிருப்பினும் தர்க்கரீதியாக பெறக்கூடிய தீர்மானம் எனின் அதற்கேற்ப கீழே காட்டப்படும் முடிவுகளில் ஒன்றிற்கு வரக்கூடியதாக உள்ள விடையிற்குரிய இலக்கத்தைத் தெரிக.***

A. 1 ஆவது முடிவு மட்டும் உண்மையாகும்.
B. 2 ஆவது முடிவு மட்டும் உண்மையாகும்.
C. 1 அல்லது 2 போன்ற முடிவுகள் உண்மையாகும்.
D. 1 மற்றும் 2 போன்ற இரண்டும் பொய்யானவை.
E. 1 மற்றும் 2 போன்ற இரண்டும் உண்மையாகும்.

21) கூற்று  I : குதிரைகள் எல்லாம் நாய்களாகும்.
  II : நாய்கள் எல்லாம் எலிகளாகும்.
முடிவு  1 : குதிரைகள் எல்லாம் எலிகளாக இருக்க வேண்டும்.
  2. : எலிகள் எல்லாம் நாய்களாக இருக்க வேண்டும்
முடிவுகளுள் உண்மையானது.
1. A  2. B  3. C  4. D  5. E

22) கூற்று I : எந்தவொரு நாணயக் குற்றியும் ஒரு ரூபாய் குற்றி இல்லை.
II : வெள்ளித்துண்டு ஒரு நாணயமாகும்.
முடிவு 1 : வெள்ளித்துண்டு ஒரு ரூபாய் குற்றி இல்லை.
2. : வெள்ளித்துண்டு ஒரு ரூபாய் குற்றியாக இருக்க இடமுள்ளது.
முடிவுகளுள் உண்மையானது.
1. A 2. B 3. C 4. D 5. E

23) கூற்று I : தந்தையார் எல்லோரும் மகன்மாராகும்.
II : மகன்மார் எவரும் கற்றவர்கள் இல்லை.
முடிவு 1 : சில தந்தைமார் கற்றவர்களாவார்கள்.
2. : தந்தைமார் அல்லாத மகன்கள் கற்றவர்கள் ஆவார்கள்.
முடிவுகளுள் உண்மையானது.
1. A 2. B 3. C 4. D 5. E

❖ ***24 தொடக்கம் 25 வரையான வினாக்கள் கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.***


- கல்லூரியின் விவாதக் குழுவிற்காக ஆண் மாணவர்கள் இருவரும் மாணவிகள் இருவரும் தெரிவு செய்யப்பட வேண்டும்.
- அதற்காக நடைபெற்ற ஆரம்பத் தெரிவின் போது மூன்று மாணவிகள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.
- அவர்கள் அமலா, விமலா, நிமலா என்போர்களாவார்கள்.
- ஆண் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தது நான்கு பேர் மட்டுமாகும்.
- அவர்கள் விமலன், நிமலன், பிரமன், ரங்கன் என்போர்களாவார்கள்.
- விமலா என்பவர் விமலனுடன் ஒன்றாக செயற்பாடுவதற்கு விருப்பமில்லை.
- நிமலா என்பவர் பிரமனுடன் ஒன்றாக செயற்படுவதற்கு விருப்பமில்லை.
- பிரமன் என்பவர் நிமலனுடன் ஒன்றாக செயற்படுவதற்கு விருப்பமில்லை.

இதற்கேற்ப சரியான விடையைத் தெரிவு செய்க.

24) ஆரம்ப தெரிவிலே விமலன் என்பவர் அகற்றப்பட்டாரெனின் அந்தக் குழுவின் இணைப்பு இவற்றுள் எதுவாக இருக்க முடியும்?
1. ரங்கன், நிமலன், அமலா, நிமலா
2. நிமலன், பிரமன், அமலன், நிமலா
3. நிமலன், பிரமன், அமலா, விமலா
4. ரங்கன், பிரமன், அமலா, நிமலா
5. மேற்கூறிய ஒன்று மல்ல. (............)

25) தெரிவு செய்யப்பட்ட குழுவிலே விமலன் இருந்தால் குழுவிற்குத் தெரிவு செய்யப்படும் ஏனையவர்கள் யார்?
1. நிமலன், விமலா, நிமலா
2. பிரமன், அமலா, நிமலா
3. ரங்கன், அமலா, நிமலா
4. ரங்கன், விமலா, நிமலா
5. மேற்கூறிய ஒன்றுமல்ல. (............)

❖ ***26 தொடக்கம் 28 வரையுள்ள வினாக்கள் உருவில் காட்டப்பட்டுள்ள சுவரின் ஓரத்தில் அமைக்கப்பட்டுள்ள சதுரமுகி வடிவிலான தொகுதியை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. அதனை நன்கு அவதானித்து கீழே தரப்பட்ட வினாக்களுக்கான விடைகளைக் காண்க.***



26) இந்த சதுரமுகிகளின் தொகுதியிலே எத்தனை சதுரமுகிகள் உள்ளன?
1. 15 2. 18 3. 22 4. 32 5. 35 (............)



agaram.lk

27) இங்கு நிலத்தில் தொடுகையுறும் பக்கங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
1. 5 2. 9 3. 10 4. 15 5. 21 (............)

28) இங்கு ஒன்றுக்கொன்று தொடுகையுறும் பக்கச் சோடிகள் எத்தனை உள்ளன?
1. 90 2. 120 3. 135 4. 150 5. 210 (............)

❖ **29ஆம், 30ஆம் வினாக்களில் ஒரு பிரச்சினையும் *X, Y* என இரண்டு கூற்றுகளும் தரப்பட்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப உமது விடையைத் தெரிவு செய்க.**

- **பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று *X* மட்டும் போதுமானது எனில் A இணையும்.**
- **பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று *Y* மட்டும் போதுமானது எனில் B இணையும்.**
- **பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று *X* கூற்று *Y* இரண்டினையும் ஒன்றாக இணைக்க வேண்டுமெனில் C இணையும்.**
- **பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று *X* இனை வேறாகவும் கூற்று *Y* இனை வேறாகவும் பயன்படுத்த வேண்டுமெனில் D இணையும்.**
- **பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கூற்று *X* உம் *Y* உம் தரும் தகவல்கள் போதுமானவையல்ல எனின் E இணையும்.**

**விடையாகத் தெரிவு செய்க.**

29) நந்தினியின் வயது எத்தனை ஆண்டுகளாகும்?
X : அடுத்த வருடம் நந்தினியின் வயது அவளின் தாயாரின் வயதின் அரைவாசிகளாகும் அப்போது இருவரின் வயதுகளின் கூட்டுத்தொகை 78 ஆகும்.
Y : இன்னும் ஐந்து வருடங்களில் அவளின் வயது ஒரு தசாப்தத்தின் முன்னர் இருந்த வயதை விட இரு மடங்காகும்.
1. A 2. B 3. C 4. D 5. E

30) காட் (cards) விளையாடுவதற்காக ஒரு வட்ட மேசையைச் சுற்றி ஐந்து ஆட்கள் அருகருகே அமர்ந்திருந்தனர். சரத் இற்கு அடுத்ததாக நிமலன் அமர்ந்திருக்கின்றானா?
X : உபாலிக்கும் தனராஜிக்கும் அடுத்ததாக ரஞ்சித் அமர்ந்திருக்கின்றான்.
Y : தனராஜிற்கு அடுத்ததாக நிமலன் அமர்ந்துள்ளார்.
1. A 2. B 3. C 4. D 5. E

31) ஒரு பாடசாலையில் 60% மான ஆசிரியர்கள் பெண்கள். 50% மான ஆசிரியர்கள் திருமணமானவர்கள். ஆண் ஆசிரியர்கள் $\frac{1}{4}$ பங்கினர் திருமணமாகாதவர்கள் எனில், திருமணமான பெண்கள் என்ன பங்கினர்?
1. $\frac{1}{3}$ 2. $\frac{2}{3}$ 3. $\frac{3}{4}$ 4. $\frac{1}{5}$ 5. $\frac{3}{5}$

❖ **32ஆம், 33ஆம் வினாக்கள் பின்வரும் பந்தியை அடிப்படையாகக் கொண்டவை.**

ஒருநாட்டில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் மூலம் குளிர் வானிலை நிலவும் காலங்களை விட வெப்ப வானிலை நிகழும்போது அதிக அளவு வன்செயல், குற்றங்கள் இடம்பெறுவது தெரியவந்துள்ளது. இதனால் வானிலைகளை நாம் கட்டுப்படுத்தி வெப்பநிலையைக் குறைக்க முடியுமானால் வன்செயல், குற்றங்களின் அளவு வீழ்ச்சியடையும்.

A. வானிலை நிலைமைகளுக்கும் குற்றங்களின் வீதத்திற்கும் இடையிலான தொடர்பு தற்செயலான சமகால நிகழ்வாகும்.
B. வானிலை நிலைமைகளுக்கும் குற்றங்களின் வீதத்திற்கும் இடையிலான தொடர்பு காரணகாரிய இயைபுள்ளது.
C. வானிலை நிலைமைகளுக்கும் குற்றங்களின் வீதத்துக்கும் இடையிலான தொடர்பு கட்டுப்படுத்தக் கூடியது.

32) மேற்படி வாதத்திற்கு அடிப்படையான கூற்று / கூறுகள் எது / எவை?
1. A மட்டும் 2. B மட்டும் 3. A, B மட்டும் 4. B, C மட்டும் 5. A, B, C

agaram.lk

33) பின்வரும் எவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்டால் கீழே தரப்பட்டுள்ள வாதமானது வலுவானதாக்கப்படும்.

1. வெப்பமான வானிலை நிலவும் காலங்களில் பெருமளவு மக்கள் குளிரான பகுதிகளுக்கு இம்பெயர்கின்றனர் என வருடாந்தப் புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.
2. ஆய்வு கூடப் பரிசோதனையில் பரிசோதனைத் தொகுதி உறுப்பினர்களுக்கிடையில் முரட்டுத் தனமான நடத்தை அதிகரிப்பதற்கு கூடுதலான வெப்ப அளவு மாத்திரம் காரணமாக இருந்தது.
3. குளிர்வானிலையை விட வெப்பமான வானிலை நிலவும் போது பெருமளவு அசௌகரியத்துக்குள்ளாகும் வறிய சமூக பொருளாதார நிலைமைகளே குற்றங்கள் அதிகரிப்பதற்கான நேரடிக் காரணங்களாகும்.
4. எதிர் காலத்தில் வானிலையைக் கட்டுப்படுத்த முடியும்.
5. பெருமளவு மக்கள் வெப்பவானிலை நிலவும் காலங்களில் கதவுகளையும் யன்னல்களையும் திறந்து வைத்திருப்பர்.

❖ **34 ஆம், 35 ஆம் வினாக்கள் பின்வரும் தகவலை அடிப்படையாகக் கொண்டவை.**

- அமலன், விமல் கொலின், டிலான், எமில், பிராங்க் ஆகியோர் ஒரு வாங்கில் அமர்ந்திருக்கின்றனர்.
- அமலனுக்கும் கொலினுக்கும் இடையில் டிலான் அமர்ந்திருக்கின்றான்.
- பிராங்க் இற்கு வலப்பக்கத்தில் விமல் அமர்ந்திருக்க எமில் இற்கு வலப்பக்கத்தில் அமலன் அமர்ந்திருக்கின்றான்.
- டிலானுக்கும் பிராங்க் இற்கும் இடையில் கொலின் அமர்ந்திருக்கிறான்.


34) இடப்பக்கக் கடைசியில் அமர்ந்திருப்பவர் யார்?

1. அமலன் 2. விமல் 3. டிலான் 4. எமில் 5. பிராங்க்

35) வலப்பக்கக் கடைசியில் அமர்ந்திருப்பவர் யார்?

1. அமலன் 2. எமில் 3. டிலான் 4. பிராங்க் 5. விமல்

❖ **36 தொடக்கம் 37 வரையுள்ள வினாக்களுக்கு பின்வரும் வரைபடத்தை அவதானிக்குக.**



agaram.lk

36) உருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை?

1. 8 2. 10 3. 12 4. 16 5. 18

37) உருவில் உள்ள நாற்பக்கங்களின் எண்ணிக்கை?

1. 2 2. 3 3. 4 4. 10 5. 14

38) ஒரு தனியாள் செயற்றிட்ட அறிக்கை தயாரித்தலில் உள்ளடக்கப்பட்ட பல முக்கிய படிமுறைகள் கீழே தரப்பட்டடுள்ளன. இப்படிமுறைகள் ஒழுங்கான வரிசைக்கிரமப்படி தரப்படவில்லை.

A. தகவல்களைச் சேகரித்தல்.
B. ஏனையவர்களின் கருத்துக்களை ஆலோசித்தல்.
C. பொருத்தமான ஒரு பிரச்சினையை இனம்காணுதல்.
D. தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல்.
E. நோக்கங்களைத் தீர்மானித்தல்.
F. முடிவுகளை முன்வைத்தல்.
G. முறையியலைத் தீர்மானித்தல்.

இப்படிமுறைகளை ஒழுங்கான வரிசைக்கிரமப்படி காட்டும் விடையைத் தெரிவு செய்க.

1. ADFEBCG 2. GCADEFB 3. CBEGADF 4. BACEGDF 5. CAGDEFB

39) பின்வருவனவற்றுள் எது ஓர் அபிப்பிராயம் அன்று.


1. பூமி சூரியனைச் சுற்றிச் சுழல்கிறது.
2. சூரியன் ஒரு நட்சத்திரமாகும். பூமி ஒரு கோள் ஆகும்.
3. சந்திரன் ஒரு கோள் ஆகும்.
4. பூரணை தினங்களில் மழை பெய்யும்.
5. அமெரிக்க விண்வெளி வீரர்கள் சந்திரனில் காலடி வைத்தனர்.

40) கீழே தரப்பட்டுள்ளவற்றுள் எது ஓர் அபிப்பிராயம் அன்று.

1. வெண்ணெயைவிட மார்ஜரின் நன்று.
2. வெண்ணெய் ஒரு விலங்கு உற்பத்திப் பொருளாகும்.
3. இருதய நோயாளிகள் எப்போதும் இரக்கமுள்ளவர்கள்.
4. இரக்கம் பெண்ணின் உள்ளார்ந்த குணமாகும்.
5. ஆண்களை விடப் பெண்கள் கற்றலில் கெட்டிக்காரர்.

❖ **41, 42 ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களையும் வரைபையும் அடிப்படையாகக் கொண்டவை.**

சுனிலா மு.ப 9.00 இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்டு அவளுடைய சிநேகிதியாகிய அமலாவின் வீட்டிற்கு நடந்து செல்கின்றாள். அவள் மு.ப 9.40 இற்கு அவ்வீட்டை அடைகின்றாள். அவர்கள் இருவரும் மு.ப 10.00 இற்கு அமலாவின் வீட்டிலிருந்து தொடங்கிக் கமலாவின் வீட்டிற்குச் சைக்கிளில் செல்கின்றனர். அவர்கள் மு.ப 11.40 இற்குக் கமலாவின் வீட்டை அடைகின்றனர். சுனிலாவின் இயக்கங்கள் பற்றிய வேக – நேர வரைபு கீழே தரப்பட்டுள்ளது.



agaram.lk

41) சுனிலாவின் வீட்டிலிருந்து அமலாவின் வீடு எவ்வளவு தூரத்தில் உள்ளது?


1. $\frac{1}{2}$ km  2. $\frac{3}{4}$ km  3. 1 km  4. $1\frac{1}{4}$ km  5. $1\frac{1}{2}$ km

42) மு.ப 10.00 தொடக்கம் மு.ப 10.40 வரைக்கும் சுனிலாவின் சராசரிக் கதி யாது?

1. $4\ km\ h^{-1}$  2. $6\ km\ h^{-1}$  3. $8\ km\ h^{-1}$  4. $10\ km\ h^{-1}$  5. $12\ km\ h^{-1}$

❖ **43, 44 ஆகிய வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.**

உருவில் காணப்படுகின்றவாறு மூன்று சர்வசம வட்டத் திண்மத் தகடுகள் ஐந்து சர்வசமச் சதுரத் திண்மத் தகடுகளைப் போன்று அதே நிறையை உடையன.




43) எத்தனை வட்டத்தகடுகள் 180 சதுரத் தகடுகளைப் போன்று அதே நிறையை உடையன?

1. 108  2. 80  3. 60  4. 45  5. 40

44) வட்டத் தகடுகளின் $x$ எண்ணிக்கையின் நிறையின் இரு மடங்கானது சதுரத் தகடுகளின் $y$ எண்ணிக்கையின் நிறைக்குச் சமமெனின், $y$ யின் மிகச்சிறிய பெறுமானம் யாது?
1. 3 2. 4 3. 5 4. 9 5. 11

45) மின் நுகர்ச்சிக்கான மொத்தக் கட்டணம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிக்கப்படும் அதேவேளை மொத்தக் கட்டணத்தில் 15% வாற் (VAT) வரியாக அறவிடப்படுகின்றது. மொத்த நுகர்ச்சி 104 அலகுகள் எனின், மொத்த சிட்டை யாது?

| நுகர்ந்த அலகுகளின் எண்ணிக்கை (X) | அலகிற்கான கட்டணம் ரூ. |
|---|---|
| $X \le 30$ | 6 |
| $30 < X \le 50$ | 8 |
| $50 < X \le 100$ | 12 |
| $X > 100$ | 15 |

1. ரூ. 940 2. ரூ. 960 3. ரூ. 1000
4. ரூ. 1100 5. ரூ. 1150

46) ஒரு நேரிய 700 m நீளமுள்ள வேலியில் 236 கம்பங்கள் சம தூரங்களில் உள்ளன. அதனை ஒத்த 1400 m நீளமுள்ள ஒரு வேலியில் எத்தனை கம்பங்கள் இருக்கும்?
1. 468 2. 469 3. 470 4. 471 5. 472

47) மண்டபம் A யின் நீளம் அதன் அகலத்தின் மூன்று மடங்காகும். மண்டபம் B யின் நீளம் மண்டபம் A யின் நீளத்திலும் பார்க்க 5 m குறைவாகவும் மண்டபம் B யின் அகலம் மண்டபம் A யின் அகலத்திலும் பார்க்க 2m கூடுதலாகவும் உள்ளன. இரு மண்டபங்களும் ஒரே பரப்பளவைக் கொண்டிருப்பின், மண்டபம் B யின் அகலம் யாது?
1. 15 m 2. 12 m 3. 10 m 4. 8 m 5. 6 m

48) ரூ. 300 விலையுள்ள ஒரு பொருளின் மீதான வரி 50% இலிருந்து 8 % வரைக்கும் மாறுமெனின், பொருளின் உச்ச கிரயம் (அ-து விலை + விற்பனை வரி) யாது?
1. ரூ. 310 2. ரூ. 312 3. ரூ. 315 4. ரூ. 318 5. ரூ. 324

agaram.lk

❖ **49, 50 ம் வினாக்கள் பூரணமற்ற மந்திரச் சதுரத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் பிரதான மூலை விட்டத்திலும் உள்ள எண்களின் கூட்டுத்தொகை சமமாகும். மந்திர சதுரத்தில் எந்த இரு எண்களும் சமமல்ல.**

எண்கள் 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 19 பயன்படுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| B | 11 | |
| 13 | A | |
| | | 12 |

49) எழுத்து A இடப்பட்ட சதுரத்தில் வரவேண்டிய எண்?
1. 19 2. 18 3. 17 4. 16 5. 15

50) எழுத்து B இடப்பட்ட சதுரத்தில் வரவேண்டிய எண்?
1. 16 2. 17 3. 18 4. 19 5. கூறமுடியாது